சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
அமர்வு வழக்கு எண் 38/2009

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 5 (lw 8) | நாள் | 28.10.2024 |
| பெயர் | டாக்டர். N. சம்பத்குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1வது எதிரி ஆஜர் இல்லை. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரி ஆஜரின்மை காரணமாக எதிரி தரப்பு வழக்கறிஞர் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பணி ஓய்வு பெற்று மயிலாடுதுறையில் சொந்தமாக கிளினிக் வைத்து நடத்தி வருகிறனே். இதற்கு முன்பு 10.06.2007 அன்று மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை 04.00 மணிக்கு ராஜராஜன் வயது 40, த/பெ. சுப்ரமணியன் மணக்குடி, மெயின் ரோடு என்பவர் மருத்துவ நமூனா 25/medical/2007 என்ற பூம்புகார் காவல் நிலைய மருத்துவ நமூனாவுடன் சிகிச்சைக்கு வந்தார். அவர் தர்மபுரத்தில் தங்களுடைய பேருந்து TNSTC TN 49–N–1378 என்ற வண்டியை மறித்து அகோரம் என்பவர் தன்னை கையால் குத்தியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு எந்தவிதமான புறக்காயங்களும் காணப்படவில்லை. அவருக்கு புறநோயளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண தன்மையுடையது என குறிப்பிட்டு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அசாஆ. 1.** இந்த வழக்கு சம்பந்தமாக பூம்புகார் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரி. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க விபத்து பதிவேடு வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.